பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

03 08 2026 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சாலையோர வியாபாரிகளுக்கு அதிகாரமளிப்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- தமிழக அரசின் அனுமதியில்லாமல் மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்ட முடியாது என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.
- குற்றாலத்தை உலகத் தரத்திலான சுற்றலா மையமாக மாற்ற மாநில அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளும் என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேஷ் தெரிவித்துள்ளார்.
- காவரி கரையோர மாவட்டங்களில் ஆடிப்பெருக்கு, இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.
- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் இந்தியா 39 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் 4வது இடத்தைப் பிடித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சாலையோர வியாபாரிகளுக்கு அதிகாரமளிப்பதில் மத்திய அரசு உறுதியாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மதுரை மேலசித்திரை வீதியில் உணவகம் நடத்தி வரும் தேசியமணி என்பவர் சாலையோர வியாபாரிகளுக்கான பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின்கீழ் கடன் பெற்றதால் அதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினார்.

அவருக்கு பதில் கடிதம் எழுதியுள்ள பிரதமர், வங்கிக் கடன் பெறுவதில் சாலையோர வியாபாரிகள் மற்றும் சிறுதொழில் முனைவோர் சந்தித்த சிரமங்களுக்குத் தீர்வு காண மத்திய அரசு ஸ்வநிதி திட்டத்தை தொடங்கியதாக கூறினார்.

உரிய நேரத்தில் அரசின் மூலம் கிடைக்கும் ஆதரவு மற்றும் வங்கிக் கடன் எவ்வாறு உழைக்கும் மக்களின் வாழ்க்கையை மாற்றுகிறது என்பதற்கு மதுரை சிறு வணிகரின் கடிதம் விளக்குவதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற சிறு வணிகர்களின் அனுபவமானது, மற்றவர்களும் பல்வேறு நலத்திட்டங்களைப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற ஊக்கமளிக்கும் என்றும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்நிலையில் பிரதமர் தமக்கு எழுதிய கடிதம் மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக சிறுவணிகர் திரு. தேசியமணி கூறினார்.

<<<<>>>>

தமிழக அரசின் அனுமதியில்லாமல் மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்ட முடியாது என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

ஈரோட்டில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

காவிரி பிரச்சினையை தமிழக அரசு நிதானமாகவும், பொறுப்புணர்வுடனும் அணுகும் என்றும் அவர் கூறினார்.

விரைவில் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட உள்ள வேளாண் நிதிநிலை அறிக்கையில் மாநில விவசாயிகள் பயனடையும் வகையில் பல அறிவிப்புகள் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் நிதிநிலைக்கு ஏற்ப படிப்படியாக அமல்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

<<<<>>>>

குற்றாலத்தை உலகத் தரத்திலான சுற்றலா மையமாக மாற்ற மாநில அரசு தீவிர நடவடிக்கை மேற்கொள்ளும் என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேஷ் தெரிவித்துள்ளார்.

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்று வரும் சுற்றுலாப மேம்பாட்டுப் பணிகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

குற்றால அருவியின் அருகில் உள்ள பகுதிகள் முழுவதும் வணிகமயமாகி மக்கள் நடமாட்டத்திற்கு இடையூறாக இருப்பதாக கூறினார்.

சுற்றுலாப் பயணிகளின் நலனைப் பாதுகாக்க முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், பெண்கள் பாதுகாப்புடன் அருவியில் குளித்துச் செல்லவும், உடை மாற்றவும் போதிய அறைகள் கட்டித் தரப்படும் என்று கூறினார்.

ஐந்தருவி உள்ளிட்ட பகுதிகளில் நிலவும் கழிப்பிட வசதி மற்றும் சுகாதார பிரச்சினைகளுக்கு விரைவில் உரிய தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பிளாஸ்டிக் இல்லாத குற்றாலம், குப்பையில்லா குற்றாலம் என்ற இலக்குடன் விழிப்புணர்வு இயக்கம் முன்னெடுக்கப்பட உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

கபினி அணையில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவிற்கு இன்று வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடகாவின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான தலைக்காவிரி, பாகமண்டலா, மடிகேரி, சோமாவார்பேட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கடந்த 3 நாட்களாக கனமழை பெய்து வருகிறது.

இதன் காரணமாக கிருஷ்ணராஜசாகர், ஹேமாவதி, ஹாரங்கி அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

கபினி அணை நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் அந்த அணையில் இருந்து வினாடிக்கு 12 ஆயிரம் கனஅடி தண்ணீர் தமிழகத்திற்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் இன்று தமிழக எல்லையான தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லை அடுத்துள்ள பிலிகுண்டுலுவுக்கு வந்தடையும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<>>>>

ஆடிப்பெருக்கு இன்று கொண்டாடப்படுகிறது.

காவிரியாற்றில் பெருக்கெடுத்து வரும் நீரை வரவேற்கும் விதமாகவும், இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும் ஆண்டுதோறும் ஆடி மாதம் 18ஆம் நாள் மக்கள் இந்நாளை கொண்டாடுகின்றனர்.

இந்த ஆண்டு காவிரியில் தண்ணீர் இல்லாத நிலையிலும் நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி மாவட்டங்களின் கரையோரங்களில் புதுமண தம்பதியர் மற்றும் பொதுமக்கள் வழிபாடு நடத்தி வருகிறார்கள்.

மேட்டூர் பகுதியில் ஆடிப்பெருக்கை பொதுமக்கள் பாதுகாப்புடன் கொண்டாட மாவட்ட நிர்வாகம் உரிய ஏற்பாடுகளை செய்துள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை பொய்த்துப்போனதால் அம்மாவட்டத்தில் உள்ள அப்பர் பவானி, அவலாஞ்சி உள்ளிட்ட 12 அணைகளின் நீர்மட்டம் கடுமையாக சரிந்துள்ளது.

இதன் காரணமாக நீலகிரி மாவட்டத்திற்கு மட்டுமல்ல, கோவை, ஈரோடு மாவட்டங்களிலும் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் நீலகிரி, தேனி, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களிலும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள இதர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்கள், வட கடலோர மாவட்டங்களின் ஒருசில இடங்கிலும், காரைக்கால் பகுதியிலும் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய தமிழகத்தின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்றும், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மாலை அல்லது இரவு நேரங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் சென்னையில் பல இடங்களில் இன்று அதிகாலை பலத்த மழை பெய்தது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்கா - ஈரான் இடையே அமைதிப் பேச்சுகள் இன்று மீண்டும் தொடங்கும் என்று அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

அமெரிக்காவின் Twin Falls நகரில் நேற்று அடையாளம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கியால் கண்மூடித்தனமாக சுட்டதில் 3 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 2 புள்ளி 9ஆக பதிவானது.

<<<<>>>>

அசாம் மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 5 மாவட்டங்களில் மீட்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<>>>>

ஈரோட்டில் நேற்று நடைபெற்ற பாரம்பரியம் மிக்க நாட்டு இன காளை மற்றும் பசுமாடுகள் கண்காட்சியில் 500க்கும் மேற்பட்ட மாடுகளை விவசாயிகள் பார்வையிட்டனர்.

<<<<>>>>

விவசாயம் செழிக்க நாகை மாவட்டம் திருப்பூண்டியை அடுத்த சோழவித்யாபுரம் சந்தனமாதா ஆலயத்தில் விவசாயிகள் பாரம்பரிய பொங்கலிட்டு வழிபாடு நடத்தினர்.

<<<<>>>>

ஜவ்வாது மலை காப்புக்காடு பகுதியில் அரியவகை மான்களை வேட்டையாடிய இருவரை வனத்துறையினர் கைது செய்தனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் வண்ணமயமான கலைநிகழ்ச்சிகளுடன் கிளாஸ்கோவில் நேற்று நிறைவடைந்தது.

இந்தப் போட்டியில் 13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலம் என 39 பதக்கங்களுடன் இந்தியா பதக்கப் பட்டியலில் 4வது இடத்தைப் பிடித்தது.

கடந்த 11 நாட்களாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் நேற்று நிறைவடைந்தன.

இதையடுத்து 2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியை நடத்த உள்ள இந்தியாவிடம் அதற்கான கொடியும், செங்கோலும் முறையாக ஒப்படைக்கப்பட்டது.

தடகள வீரர் நீரஜ் சோப்ரா, இந்திய ஒலிம்பிக் சங்கத்தலைவர் பி.டி. உஷா, குஜராத் துணை முதலமைச்சர் திரு. ஹர்ஷ் சங்வி ஆகியோர் அந்தக் கொடியைப் பெற்றுக்கொண்டனர்.

பின்னர் நிறைவு விழாவையொட்டி ஸ்காட்லாந்தின் பாரம்பரிய கலை, கலாச்சாரத்தைப் பறைசாற்றும் வகையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இந்தியா மற்றும் ஸ்காட்லாந்து கலைஞர்களின் கூட்டு முயற்சியில் ஜுகல்பந்தி இசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

<<<<The End>>>>